# குறுந்தொகை குறிஞ்சிப் பாடலில் அறிவியல் சிந்தனைகள்

திருமதி. ச. ஷோபனா
உதவிப் பேராசிரியர், கிருஷ்ணசாமி மகளிர்
அறிவியல் கலை மறறும் மேலாண்மையியல்
கல்லூரி, எஸ். குமராபுரம்,

**முன்னுரை**

இலக்கியம் மனிதவாழ்வுதனைப் பிரதிபலிக்கும் தன்மைத்தாகும். அவ்விலக்கியத்தின் ஊடேமனிதன் பல்வேறு அனுபவங்களைப் பெறுகிறான். அவ்வனுபவங்களை ஆராய்ந்து அறிவினை விரிவுசெய்கிறான். அதனோடு அதன் பதிவுகளை ஆராய்ந்து அடுத்தநிலைக்கு கொண்டுசெல்கிறான். அவ்வகையில் சங்க இலக்கியம் பல்வகை இலக்கியங்கள் தோன்ற சிறந்த களமாகத் திகழ்கிறது. இலக்கியஉலகில் சங்க இலக்கியம் பல்வேறு கருத்துப் பொருண்மைகளைத் தரத்தக்கது. அவ்வகையில் குறுந்தொகைபாடல் ஒன்று பன்முகத்தன்மையில் ஈண்டு கையாளப்பட்டுள்ளது.

**குறுந்தொகையின் தனிப்பெரும் சிறப்பு**

பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பட்ட இந்நூல் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப்பேரெல்லையும் கொண்ட நானூறு பாடல்களின் தொகுதியாகும். இந்நூல் 'நல்ல'என்னும் அடைமொழியோடு சுட்டப்படுகிறது. பாரதம் பாடிய பெருந்தேவனார், இந்நூலுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இந்நூல் வாயிலாக பண்டையதமிழரின் இல்வாழ்க்கை, ஒழுக்கம், மகளிர்மாண்பு, அறவுணர்வு, அறிவியல் சிந்தனை, தகவல் தொடர்பியல் பாங்கு போன்றவை பொதிந்துக் காணப்படுகின்றன.

அத்தகு, சிறப்புமிக்க குறுந்தொகையில் குறிஞ்சித் திணையில் தலைவி கூற்றாக அமையப் பெற்றபாடல் ஒன்றினைக் காணலாம். இப்பாடல் தம் ஆசிரியர் தேவகுலத்தார்.

**நிலத்தினும் பெரிதேவானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரளவின்றேசாரல்**
**கருங்கோற்குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடுநட்பே**


உ.வே.சா குறுந்தொகை மூலமும் உரையும் (பக்கம்-11)

மலைப்பகுதியிலுள்ள குறிஞ்சியின் கரியகொம்புகளில் குறிஞ்சிப்பூக்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களிலிருந்து வண்டுகள் தேனை திரட்டுவதற்கு இடமாகிய நாட்டை உடையவன் தலைவன். அத்தகு தலைவனோடு நான் கொண்ட நட்பானது சிறப்பு மிக்கது,உயர்வானது என்பதே இப்பாடலின் பொருள். இத்தலைவிக் கூற்றுபாடலை உற்றுநோக்கும் பொழுதுஆழமானகருத்து வெளிப்படுகிறது.

**அளவியலும் அளவில்லாதஅன்பும்**


ஒரு பொருளின் தன்மையை இன்னது என்று சுட்டிக்சொல்ல இன்று அளவுகோல் உண்டு (அளவியல் Mensuration). ஆனால் அன்பை அளக்க இயற்கையாலும் முடியாது என்பதையே தலைவி கூற்று வாயிலாக ஆசிரியர் முக்கோண அமைப்பில் பின்வருமாறு அமைத்துக் காட்டியுள்ளார்.

**நிலத்தினும் பெரிதேவானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரளவின்றே**




இந்த வரைபடம் தலைவியின் அன்பை முப்பரிணாம கணிதமுறையில் வெளிப்படுத்துகிறது. இது பஞ்சபூதங்கள் மூன்றினை எடுத்துரைக்கின்றன. அக்கால மக்கள் இயற்கையோடு கணித முறையையும் அளவாக கையாண்டவிதம் போற்றத்தக்கது. அளவியலில் களவியல் உரைக்கும் திறம் சிறப்பானதொன்றாகும்.

**தலைவனின் புகழும் தமிழ்நாட்டின் சிறப்பும்**




தலைவனின் நாட்டுவளத்தை தலைவிசுட்டிக் காட்டுவதன் மூலம் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சியை ஈண்டு சுட்டிக்காட்டியது சிறப்புமிக்க ஒன்றாகும். பண்டைய தமிழகம் மலை வளம் மிகுந்த நாடாகவும் காட்சியளித்திருந்தது என்பது இதன் மூலம் மெய்யாகிறது.

தென்மேற்கு பருவக்காற்று அதிகமழை பொழிவை கேரளாவுக்குத் தருகின்றது. கேரளாவுக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையில் இருப்பது மேற்குத் தொடர்ச்சிமலை. இம்மலைப் பகுதியினால் தென்மேற்கு பருவக்காற்றால் குறைந்த அளவு மழைபொழிவே தமிழகத்திற்கு கிடைக்கிறது.

இந்நிலஅமைப்பில் சிறுகனவாய்கள் வழியாகவே“சாரல்”மழை தமிழகத்திற்கு கிடைக்கிறது. இப்பாடலில் “சாரல்”என்பது சுட்டப்பட்டதால் அச்சாரல் மழைபெறும் பகுதிகளாக நீலகிரி, பழநி, ஆனைமலை போன்றவை காணப்படுகின்றன. ‘குறிஞ்சி’மலர் அதிகம் பூப்பது ‘நீலகிரி’மாவட்டம் என்பது ஐயமின்றி தெரியவருகின்றது. எனவே தலைவன் நீலகிரி பகுதியைச் சார்ந்தவன் என்பதும் தெளிவாகிறது. உலகில் ஒருசில இடங்களில் மட்டுமே இப்பூ காணப்படுகிறது. தமிழ்நாட்டில் இவ்வரிய‘பூ’காணப்படுவது நமக்கு பெருமையைத் தரத்தக்கதாகும்.

**பெருந்தேனும் தலைவனின் பெருமையும்**

தலைவி தலைவன் மீது கொண்ட நட்பானது உன்னதமானது என்பதையே கூற முனைகின்றாள். இதற்கு ‘தேனை’ ஏன் சுட்டவேண்டும் என்ற ஐயம் எழுகிறது. அதற்கு விடைதரும் வகையில் குறிஞ்சி நிலமக்களின் முதன்மை தொழிலாகவும் தேனெடுத்தல் திகழ்கிறது. அது அவர்களின் தொழிலாகமட்டும் அல்லாமல் நம்பிக்கையாகவும் திகழ்ந்திருக்கின்றது என்பதை ‘கலித்தொகை’பாடல் ஒன்று மெய்ப்பிக்கின்றது.

**சிறுகுடியிரேசிறுகுடியிரே**
**வள்ளிகீழ்விழாவரைமிசைத் தேன்தொடா**
**கொல்லைகுரல் வாங்கிஈனா மலைவாழ்நர்**
**அல்லபுரிந்துஒழுகலான்.** (கலி-39)


மலையில் வாழும் மக்கள் அல்லனவற்றைச் செய்து வாழ்ந்தால் வள்ளிக் கிழங்குகள் விளையாமல் போகநேரிடும். அது போல வேமலையின் உச்சியில் தேனீக்கள் தேன் கூடுகட்டாமல் போகும் என்பதை இப்பாடல் செப்புகின்றது. மேற்கண்ட இந்த நம்பிக்கை குறுந்தொகை பாடலுக்கும் நனி பொருத்தமுடைத்து.ஆகையால் தான் தலைவன் ‘பெருந்தேன்’ இழைக்கக் கூடியநாட்டை உடைய நல்ல ஆடவன் என்பதை தலைவிக்கூற்று வழியாக ஆசிரியர் விளக்குகிறார்.

**பெருந்தேனில் அறிவியல் பார்வை**

‘பெருந்தேன் ’என்ற ஒற்றை வார்த்தை நம்மை இன்னுமொரு கோணத்தில் சிந்திக்க தூண்டுகிறது.ஒரு மலரிலிருந்து ஒரு துளியினும் சிறிய அளவே தேனை எடுக்கமுடியும். இங்கு பல்லாயிரம் பூக்கள் இருந்தால் மட்டுமே ‘பெருந்தேன் ’என்பது சாத்தியம் ஆகும்.

அறிவியல் கூற்றுப்படிதேன் பலநற்குணங்கள் வாய்ந்தது.தேன் தூய்மையானது.

தான் விரும்பும் ஆடவன் 100% நல்லவன் என்பது இன்றளவும் வழக்கில் உள்ள ஒன்றே.அவ்வகையில் தூய்மையான தேனையுடைய மலை நாடன் தூய்மையானவன் என்பதையே தலைவிசிறப்பாக கூறுகின்றாள். அறிவியலோடுஅன்பையும் கூறும் திறம் சங்ககாலபுலவர்க்குஉண்டுஎன்பதை இப்பாடல் மெய்ப்பிக்கின்றது.





**தலைவன் கூற்றில் நட்பு**

வள்ளுவர் இன்பத்துப் பாலில்

**உடம்பொடுஉயிரிடைஎன்னமற் றன்ன**
**முடந்தையொடுஎம்மிடைநட்பு** (-1122-குறள்)

உடலுக்கும் உயிருக்கும் என்ன தொடர்பு உண்டோ,அத்தொடர்பே தலைவிக்கும் எனக்கும் ஆன நட்பு என அன்பைத் தலைவன் கூற்றுவழி வள்ளுவர் விளக்குகிறார்.

சங்ககால நூலான குறுந்தொகை 'தலைவி' கூற்றில் இத்தகு கருத்துப் பொருண்மையை வைத்தது என்பது சிறப்பிடைத்தது.




பண்டைய தமிழர் தம் அக ஒழுக்கம் 'நட்பு' என்ற வார்த்தையில் பொன்னாய் மின்னுகிறது. அக உணர்வுகளை இத்துணை நயமாக பிறமொழி இலக்கியங்கள் சுட்டுவது அறிதானதாகும்

**முடிவுரை**

மேற்கண்ட இப்பாடல் கருத்தாழமும், பொருளாழமும் மிக்கது. மேலும் பண்டைய மலைசார்ந்த தமிழகம் சிறந்த இயற்கை வளங்கள் பெற்றுத்திகழ்ந்தன என்பது தெளிவு. தலைவி தான் விரும்பிய ஆடவனின் சிறப்புக்களை தானே சுட்டும் சூழலை ஆசிரியர் உருவாக்கி நமக்கு பல தகவல்களைத் தந்துள்ளார். ***'வான் புகழ்'*** கொண்ட தமிழ்நாடகத் திகழ்கிறது என்பதற்கு இப்பாடல் நற்சான்றாகிறது. பல நூறு ஆண்டுகள் கழிந்தும் இன்றைய சமூகச் சுழலுக்கும் தகுந்த பாடலாக இப்பாடல் திகழ்வது. சங்க இலக்கியத்தின் நிலைபேற்றுத் தன்மைக்குமேலும் அணிசேர்ப்பதாக அமைகின்றது. அன்பை மட்டும் அகத்தில் சுட்டாது அதை அறிவியலோடு சுட்டும் விதமும் தமிழர் தம் பண்பாட்டுசிறப்புக்கும் அறிவுசிறப்புக்கும் நற்சான்றாகிறது.